நான் யாரு?



சுவாமி பிரபஞ்சநாதன்

ஸ்ரீ குருப்யோ நம:

நான் யார்?



சுவாமி பிரபஞ்சநாதன்

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	நான் யாரு?
தொகுப்பாசிரியர்	:	சுவாமி பிரபஞ்சநாதன்
மொழி	:	தமிழ்
வகை	:	தன்னாட்டம்
முதற்பதிப்பு	:	*2021*
நூலின் அளவு	:	டெம்மி
பக்கங்கள்	:	*17*
தாள்	:	*A5 (5.83" X 8.27")*
எழுத்து அளவு	:	*12* புள்ளிகள்
உரிமை	:	ஆசிரியருக்கு
கட்டமைப்பு	:	சாதா பைண்டு அட்டை
கணினி அச்சு	:	ஓம் கிராபிக்ஸ்
விலை	:	அகவிழிப்பு

நான் யாரு?

“ஒன்றே எல்லாமாக இருக்கிறது”.

அதாவது, ‘**இருப்பதெல்லாம் இறைவனே!**’ என்பது தான் அத்வைத சித்தாந்தம்.

அந்த ஒரு பொருள் எது? அது எப்படி எல்லாமாக மாறியது? இதில் ‘**நான்யாரு?**’ என்பது போன்ற சந்தேகம் எல்லோருக்கும் இருக்கும்.

நாம் காணும் இந்த உலகமும், இந்த உலகத்தில் வசிக்கின்ற நாமும், இந்த பிரபஞ்சத்தின் ஒரு அங்கம் என்பதினால், முதலில் இந்த பிரபஞ்சம் உண்டானது எப்படி? என்பதை அறிந்துக் கொள்ளலாம். நவீன அறிவியல் பெருவெடிப்புக் கொள்கையினால், இந்த பிரபஞ்சம் உண்டானதாகக் கூறுகிறது..

பெருவெடிப்புக் கொள்கை

பெரு வெடிப்புக்கோட்பாடு (Big-Bang Theory) என்பது, அண்டம் என்ற இந்த பிரபஞ்சம் எவ்வாறு

தோன்றியது என்பது பற்றி விளக்க முயலும் ஒரு கோட்பாடு ஆகும்.

பெரு வெடிப்புக்கோட்பாடானது 20 - ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வெளியான, இரண்டு முக்கியமான கண்டு பிடிப்புகளின் அடிப்படையில் உருவானது.

ஒன்று ஐன்ஸ்டீனுடைய '**பொதுச் சார்புக்கோட்பாடு**' (General Theory of Relativity). மற்றது '**அண்டவியற் கொள்கை**' (Cosmological Principle) என்ற இரண்டு விஷயங்கள் உள்ளன.

'**பொதுச் சார்புக்கோட்பாடு**' என்பது, அண்ட வெளியில் உள்ள பொருள்களிடையே காணப்படும், ஒன்றையொன்று ஈர்த்துக்கொள்ளக்கூடிய ஈர்ப்புத் தன்மையினால், அவைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டன என்றும், அதன் வாயிலாக '**பெரு வெடிப்பு**' நிகழ்ந்தது என்றும், அதன் காரணமாக வெளியும் (space), காலமும் (time) திரிபடைந்த நிலையில், இந்த அண்டம் என்ற பிரமாண்ட பிரபஞ்சம் உண்டானது என்றும் கூறுகிறது.

'**அண்டவியற் கொள்கை**' என்பது, அண்ட வெளியில் உள்ள பொருள்கள், வெளியில் (Space) ஒரே

சீராகப் பரவியிருக்கின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டதே ஆகும். இது விஞ்ஞானிகளின் வாதம்.

மெய்ஞானிகள் என்ன கூறுகிறார்கள்!?

இந்தப் பிரபஞ்சம் எப்படி உண்டாகியது?

ஒரு பொருள் இருக்கிறது என்றால், நிச்சயம் அதை உருவாக்கியவர் ஒருவர் இருந்தாக வேண்டும் இல்லையா?

எப்படி, எதுவும் இல்லாமல் ஒரு விஷயம் தானாகத் தோன்ற முடியுமா? இது மெய்ஞானிகளின் வாதம்.

பிரபஞ்சத்தில் அடிப்படையாக என்ன, என்ன இருக்கிறது?

பால்வெளி மண்டலங்கள், கிரகங்கள், நட்சத்திரக் கூட்டங்கள், கோள்கள், அத்துடன் அந்த கோள்களில் ஒன்றான பூமி. அந்த பூமியில் வசிக்கின்ற பல்வேறு உயிரினங்கள்.

ஆக, இவைகள் எல்லாவற்றையும் தன்னுள் கொண்டிருக்கும் எல்லையற்றது இந்த பிரபஞ்ச வெளி.

இந்த பிரபஞ்சத்தில் இருப்பவைகள் எல்லாமே அடிப்படையில் மூன்று விஷயங்களால் ஆனவை.

அவைகள், ‘**பருப்பொருள்**’, ‘**சக்தி**’ மற்றும் ‘**வெளி**’ ஆகிய மூன்று எனப்படும். இதில், பருப்பொருளும், சக்தியும் அடிப்படையில் ஒன்றுதான் என்கிறது நவீன அறிவியல்.

ஆக, “**பருப்பொருள் - சக்தி**”, இத்துடன் “**வெளி**” ஆகிய இரண்டு மட்டும்தான் இருக்கின்றன என்று எடுத்துக் கொண்டாலும், இதில் கடவுள் என்பது என்ன?

கடவுள் எங்கே இருக்கிறார்?, அல்லது எங்கே இருக்கிறது?

உண்மையில் கடவுள் மட்டும்தான் இருக்கிறார்.

அவரே பருப்பொருளையும், சக்தியையும் உண்டாக்கி எல்லாமாக இருக்கிறார் என்பதுதான் மெய்ஞானிகளின் கருத்து.

அதாவது, பிரபஞ்சத்தில் பொருள் தோன்றி, அதன்பின் உயிர்கள் தோன்றி, அதிலே ஒரு செல் உயிரினம் தோன்றி, பலசெல் உயிரினங்கள் உண்டாகி, ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் என்ற எல்லா நிலைகளையும் கடந்து, கடைசியில் பல செல்கள் உயிரிணமான மனிதனின் “**உணர்வுநிலை**” என்ற அறிவு

உருக்கொண்டு, இப்போது தானிருப்பதைத் தானறியும் நிலைக்கு வந்திருக்கிறது இந்தப் பிரபஞ்ச பரிணாமம்.

உணர்வு வெளி பிரபஞ்சம்

பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சி இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

மேற்கொண்டு இந்த பரிணாமத்தின் பாதை பிரபஞ்சத்தை எங்கே கூட்டிப்போகப் போகிறது? அதில் மனிதனை எங்கு நிறுத்தப் போகிறது? மனிதனுக்கு மேலான ஒரு உயிரினம் பரிணாமத்தின் பலனாக இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்படுமா?

இதுவரையில், இந்த பிரபஞ்சம் கடந்துவந்த பாதையின் போக்கிலிருந்து பார்த்தால், முதலில் உணர்வற்ற வெறும் பருப்பொருளாகத் தோற்றம் கொண்ட பிரபஞ்சம், சிறுது, சிறிதாக உணர்வுகளை வெளிப்படுத்தி, அதிலே சுயவுணர்வு அதிகரித்துக் கடைசியில் தன்னைத்தானே '**நான்**' என்று தன்னை முழுதும் உணர்ந்துக்கொண்டு நிற்கும் நிலையை வந்தடையும் என்பதாகத் தோன்றுகிறது.

இதைத்தான் '**விராட் புருஷன்**' என்று ஏற்கெனவே வேதத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

முழுப்பிரபஞ்சமே இந்த விராட் புருஷன் என்ற "**பிரக்ஞை**" கொண்ட ஒரு ஆளாக இருப்பதும், அந்த வகையிலே இந்த பௌதிகப் பிரபஞ்சம், அந்த விராட் புருஷனின் உடல் என்றும், அதிலே இந்த சிருஷ்டியின் இயக்கமாகிய ஆற்றல் (சக்தி) என்பது அவனது மனம் என்றும், அதன் அறிவாக (ஆன்மாவாக) அவனே இருக்கிறான் என்றும் உள்ளுணர்வு மூலம் உணரும் பொழுது, இதுவே பரிணாமத்தின் '**அறுதி நிலை**' என்றும் அறியப்படுகிறது.

இனி இதற்கு மேலாக பரிணாம வளர்ச்சி இல்லை என்பது தெரிகிறது.

இதில் கடவுள் என்று எதைச் சொல்வது?

அறிவியல் அனைத்துக்கும் விளக்கமளித்தாலும், **காலம், இடம்** என்பது பற்றி நாம் இதுவரை கொண்டிருந்த கருத்துக்கள் எல்லாம் தவறானவை என்று நிரூபிக்கப்பட்டு விட்டது.

பெருவெடிப்பின் (Big Bang) போதுதான் **காலம்**, **இடம்** இரண்டும் தோன்றின என்று அறிவியல் கூறுகிறது.

அப்படியானால், ‘**பெருவெடிப்புக்கு முன்னால்**’ என்ன இருந்தது? என்ற கேள்விக்கு, விஞ்ஞானிகளிடம் பதில் இல்லாமல் போகிறது.

மெய்ஞானிகளிடம் கடவுள்தான் உலகத்தைப் படைத்து, நிர்வகித்து கொண்டிருக்கிறார் என்ற கருத்துக்கு நிலவுமானால், இதனால், இந்த பிரபஞ்சம் இன்னும் எதிர்காலத்தில்தான் இருக்கிறது என்றாகிறது.

அப்படியானால்! இப்போது கடவுள் என்னவாக இருக்கிறார்?

என்ன செய்துக்கொண்டிருக்கிறார்?

எந்தவிதத்தில், இந்த பிரபஞ்சத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறார்? ‘**எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்**?’.

என்ற கேள்விகளை முன் வைக்கும் பொழுது, தன்னையறிந்த தத்துவஞானிகளின் நேரடி அனுபவம் வெளிப்படுகிறது.

அவைகளை இனி சற்று விரிவாக பார்க்கின்ற பொழுதுதான், விடையாக கடவுள் எங்கு இருக்கிறார்? என்ன செய்துக் கொண்டிருக்கிறார்? எதை படைத்துக் கொண்டிருக்கிறார்? போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிய வரும்.

பிரபஞ்சம் எப்போது தோன்றியது?

‘**படைப்பு**’ என்ற ஒரு சொல்லை பயன்படுத்தும் போது, அது ஒரு உருவத்தையோ, அல்லது ஒரு இயந்திரத்தையோ செய்யும் முறைபோல, நம் மனத்தில் எழுகிறது.

ஆனால், பிரபஞ்சம் விஷயத்தில் இது நிச்சயம் பொருந்தவே பொருந்தாது.

பிரபஞ்சம் எப்போது படைக்கப்பட்டது? என்ற கேள்விக்கு மாற்றாக, **அது எப்போது தோன்றியது?** என்ற கேள்வி இன்னும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

இந்த உலகில் மனிதன் தோன்றுவதற்கு முன்பு எதுவுமே சுயப்பிரக்ஞை என்ற “**தன்னுணர்வு**” உள்ளதாக கிடையாது.

மிருகங்களுக்கு ‘**அனுபவம்**’ என்பதும் இல்லை.

‘**நான் இருக்கிறேன்**’,‘ **நான் பார்க்கிறேன்**’ என்ற சுயவுணர்வு மிருகங்களுக்குக் கிடையாது.

பரிணாமத்தில் மனிதன் தோன்றியபோது மட்டும் தான் ‘**அனுபவம்**’ என்பது முதன்முதலாக உண்டானது.

அப்போதுதான் பிரபஞ்சம் முதன் முறையாகப் ‘**பார்க்கப்பட்டது**’. அப்போதுதான் பிரபஞ்சம் ‘**தோற்றம்**’ கொண்டது.

அதாவது, நாம் காணும் இந்த பிரபஞ்சம் தோன்றியது.

என்ன உளறுகிறீர்கள்! அப்படியானால், மனிதன் தோன்றுவதற்கு முன்பாக பிரபஞ்சம் இல்லையா? என்ற சந்தேகம் எழுகின்றது அல்லவா?

சற்று பொருமையாக கவனித்து படியுங்கள்!

மனிதனுக்கு முன்பாக பிரபஞ்சம் இல்லை என்று கூறவரவில்லை, அதை பார்க்கக்கூடிய, அறியக்கூடிய பக்குவம் உள்ள உயிரினம் உண்டாகவில்லை என்று கூற வருகிறேன்.

அதன் அடிப்படையிலே, இந்த பிரமாண்டமான பிரபஞ்சத்தை முதன் முதலாக அறிந்துக் கொண்ட அறிவுடைய உயிரினம் மனித இனம் என்பதினால், அதன் படைப்பைப் பற்றியும் அறிய ஆர்வம் கொண்டவன் மனிதன்.

அந்த வகையிலே, இந்த படைப்பைக் கண்டு பிரமித்துப் போன மனிதன், இதைப் படைத்தவன் ஒருவன் இருந்தாக வேண்டும். எனவே, அவனை நான்

பார்த்தாக வேண்டும் என்ற ஆர்வத்தில் அவனையும் அறிய ஆர்வம் கொண்டான்.

அதிலே, கடவுள் என்பதை, நாம் அழிவற்ற பரம்பொருள், கால, தேசம் கடந்தது, ஆதியும், அந்தமும் இல்லாதது. அதாவது, தொடக்கமும், முடிவும் இல்லாதது என்று கூறுகிறோம்.

அப்படியான ஒரு கடவுள் இருக்க வேண்டும் என்றால், அது நாம் நினைத்துக் கொண்டிருப்பதுப் போன்று, நம்முடைய புலன்களுக்கு புலப்படுகின்ற ஒன்றாக இருக்கவே முடியாது.

ஏன் எனில், படைக்கப்பட்டவைகள் எல்லாமே மாற்றத்திற்கு உட்படுவதையும், இறுதியில் மறைந்து விடுவதையும் மனிதன் அறிந்தான். அந்த மறைவுக்கு காரணமான ஒரு பொருள் நிச்சயமாக "**மறைபொருள்**" ஆகத்தான் இருக்க வேண்டும் என்று அறிந்துக் கொண்டான்.

அந்த முடிவிலே, அது எங்கு மறைந்துள்ளது என்பதை கண்டுபிடிக்க தேடியவன் இந்த மொத்த பிரபஞ்சத்திலும் அதை தேடி கண்டு பிடிக்க முடியாமல், அலுத்துப்போய், அயர்ந்து தூங்கிப்போனவனுக்கு, தன்னுடைய தூக்கத்தில், தான் இல்லாமல் போனதை உணர்ந்துக் கொண்டான்.

அவ்வாறு, ஆழ்ந்த தூக்கத்தில் "**நான்**" இல்லாமல் இருந்துள்ளேன். தூங்கி எழுந்ததும் என்னை "**நான்**" உணர்கின்றேன்! என்றால், அந்த **உணர்பவன் யார்?** என்ற உந்துதல் அவனுக்கு உண்டானது.

ஆம்! அந்த உணர்வே "**நான்**". அந்த உணர்வே "**அவன்**" என்று அறிந்துக் கொண்டான். அப்படியானால், நானும், நான் தேடும் கடவுளும் வேறு வேறு அல்ல என்பதையும் அறிந்துக் கொண்டான்.

எனவே, அந்த உணர்வாகிய "**பிரக்ஞை**" ஒன்று மட்டும்தான் உள்ளது. அதுவே எல்லாமாக இருக்கிறது. அதுவே எல்லாவற்றையும் அறிகிறது என்பதை அறிந்துக் கொண்டான்.

ஆக, இந்த சிருஷ்டிக்குள் "**பிரக்ஞை**" என்னும் '**சுயஉணர்வு**' என்ற "**தன்னுணர்வு**" நிலை உண்டானது, இந்த மனிதன் தோன்றிய பிறகுதான்.

ஆகவே, இந்த பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னாலும், பிரபஞ்சம் உள்ள போதும், அழிந்த பின்னாலும், தான் அழியாதிருப்பது "**உணர்வுநிலை**" ஒன்று மட்டுமே.

தொழில் நுட்ப வல்லுநர்கள் (Engineer) இயந்திரங்களை (Machines)) உண்டாக்கியதுப் போன்று,

கடவுள் (GOD) இந்தப் பிரபஞ்சத்தை (Universe) உண்டாக்கவில்லை.

கடவுளே பிரபஞ்சமாக உருக்கொள்கிறார் (God is the Universe) என்பதுதான் முற்றிலும் உண்மை.

‘தன்னுணர்வு’, **’விழிப்புணர்வு’**, **‘நுண்ணுணர்வு’**, **‘சுயவுணர்வு’**, **‘பேருணர்வு’**, **’உள்ளுணர்வு’**, **’உணர்வு’** ஆகியவைகள் எல்லாமே **‘நான்’** என்ற அந்த பரம் பொருளின் **‘பார்வை’** அம்சங்கள்.

ஆனால், கடவுள் என்பது படைக்கப்பட்ட இந்த பிரபஞ்சத்தின் ஒரு அம்சம் இல்லை.

உண்மையில் இந்த சிருஷ்டி முழுவதிலும் ஊடுருவி நிற்பதும், அதேசமயம் அனைத்துக்கும் அப்பால் கால, தேசம் கடந்து நிற்பதும் ஆகிய இந்த **“பிரக்ஞை”** மட்டும்தான் கடவுள்.

(‘**பிரக்ஞானம் பிரம்ம**’ என்கிறது மகாவாக்கியம்.)

“நான்” என்பது என்ன? என்பதை அறிந்துக் கொண்டால் **வழிபடுபவன் - வழிபடப்படும் கடவுள்** என்ற இருமை நிலைகள் இல்லாமல் போகிறது.

இதை அறிவுசார்ந்த, மனதைக் கடந்த மகத்தான உணர்வுநிலை எனலாம்.

‘**அறிவு**’ என்பதாக இதுவரை நாம் அறிந்து வைத்துக்கொண்டுள்ள அனுபவங்களை எல்லாம் கடந்து, “**சுயவுணர்வை**” (உள்ளுணர்வை) அறிந்துக் கொண்ட பின்னர், அந்த உள்ளுணர்வாகிய சுயவுணர்வில் ஆழ்ந்துபோகும் அனுபவம்தான் “**நான்**” எனப்படுகிறது.

உடல் அழியும். உடல்சார்ந்த மனம்கூட அழிந்து போகும். ஆனால், இந்த உடலையோ, மனதையோ சார்ந்திராத ஆன்மாவாகிய “**தன்னுணர்வு**” **(தன்னை அறியும் அறிவு)** என்றுமே அழிவற்றது.

ஆகவே, மனத்தைக் கடந்து உள்ளே சென்றால், உள்ளுணர்வைச் சந்திக்க முடியும். அதை அனுபவமாக அனுபவிக்கவும் முடியும்.

அதை உணர்கிற உள்ளுணர்வே “**நான்**”. அதன் அனுபவமே “**நான்**”. அதை அறிபவனும் “**நான்**”.

ஆக, உணர்வு! **(சத்),** அறிவு! **(சித்),** அனுபவம்! **(ஆனந்தம்),** என ஒன்றேயாகிய “**சத்சிதானந்தம் நான்**”.

@@@@@ நிறைவு @@@@@

நான் யாரு?



இந்த பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னாலும், பிரபஞ்சம் உள்ள போதும், அழிந்த பின்னாலும், தான் அழியாதிருப்பது "உணர்வுநிலை" மட்டுமே. அந்த உள்ளுணர்வே "நான்".